
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1091

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

99

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




# ‘பொதுநலப் பணியாற்ற முன்வாருங்கள்!’

வடமண்டல திராவிட மாணவர்கள் மாநாடு, 18.02.1945 அன்று காலை 9 மணிக்கு திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில், எ.பி.சனார்த்தனம் தலைமையில் கூடியது. சென்னை, தஞ்சை, கும்பகோணம், கடலூர், சேலம், ஆரணி, சிதம்பரம், காரைக்குடி, ஈரோடு உட்பட தமிழ்நாட்டின் பல்வேறு முக்கிய பகுதிகளில் இருந்தும் மாணவர்களும் திராவிடர் இயக்கத்தினரும், முக்கிய நிர்வாகிகள் பலரும் வருகை தந்திருந்தனர். மாணவர்கள் மட்டுமே சுமார் மூவாயிரம் பேர் திரண்டிருந்தனர்.

எஸ்.தவமணிராசன் கொடியேற்றினார். மாநாட்டை பெரியார் திறந்து வைத்தார். பின்னர் மாணவரான என்.சண்முகம் வரவேற்புரை ஆற்றினார். தலைமை உரையாற்றிய ஏ.பி.ஜனார்த்தனம், “திராவிட மாணவர் இயக்கம் வலுப்பெற்று வருகிறது” என்று கூறி, கடந்த ஓராண்டுக் காலத்தில் மாணவர் கழகம் செய்த பணிகளைப் பட்டியலிட்டுப் பாராட்டினார்.

அடுத்து பேசிய வழக்கறிஞர் டி.பி.வேதாசலம், திருச்சி, ஆதி திராவிடர் மாணவர் விடுதியில் இருந்து 34 மாணவர்கள் நீக்கப்பட்டதைக் கண்டித்தார். “ஆதி திராவிடர் என்ற காரணத்தால், கல்லூரி மாணவர்களை, அவர்களின் தன்மான உணர்ச்சிக்கு ஊறு செய்யும் முறையில் வார்டன் வேலை வாங்கக் கூடாது” என்றும் எச்சரித்தார். மாணவர்களுக்கு பாடத்திட்டங்களில் புராணங்கள், இதிகாச கற்பிதங்களுக்குப் பதிலாக பகுத்தறிவை ஊட்டி, அவர்களுக்கு தன்மான உணர்ச்சியை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்று புலவர் அரங்கசாமி வலியுறுத்தினார்.

மீண்டும் பிற்பகல் 2.30 மணிக்கு மாநாடு கூடியவுடன், சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன் பிறகு, மாணவர்கள் மத்தியில் பேசிய கலைஞர், ‘நாட்டு நிலையில், நாம் எப்படி உள்ளோம்’ என்பதை விளக்கி உரையாற்றினார். “சமுதாயத்தில் நிலவும் பல இழுக்குகளைப் போக்க, பெரியார் பலவகை முறைகளைக் கையாண்டுவிட்டார்கள். அவர்கள் காலத்திற்குள் இவை நீக்கப்படாவிடின், இளம் மாணவர்கள் உரிமையை இழக்க நேரும். அதைவிடுத்து, மாணவர்கள் அரசியல் கலக்கலாமா கூடாதா என்ற பிரச்சினையைப் பற்றி நமக்கு கவலையில்லை” என்று ஈ.வெ.கி. சம்பத் ஆவேசமாகப் பேசினார். அதன்பிறகு, மாணவி சிவபாக்கியம் மாணவர்கள் டி.கே.சீனிவாசன், குழந்தையா, எழில் நிலவன், பொன்னன் ஆகியோர் எழுச்சி உரையாற்றியதுடன் மாநாடு முடிவுற்றது.

முன்னதாக மாணவர்கள் மத்தியில் பேசிய பெரியார், “மாணவர்கள் பொதுநலத் தொண்டாற்றுவது கூடாது என்று யாரும் சொல்ல முடியாது. இந்தப் பருவத்தை கல்விக்கும் பொதுநலத் தொண்டிற்கும் சேர்ந்து பயன்படுத்துவது கல்விக்குக் குந்தமாகலாம் என்று சொல்லலாம். எப்படியிருந்தாலும், நம்நாட்டின் மேன்மைக்கும் இனத்தின் தன்மானத்துடன்கூடிய உயர்வுக்கும், வெகுநாளாக நம் இனத்துக்கு இருந்துவரும் இழிவுக்கும், முற்போக்கு முட்டுக்கட்டையும், அந்நியன் சுரண்டலும், ஆதிக்கமும் ஒழிய பாடுபடுவதற்கும் யாராவது ஒருவர் அல்லது ஒரு கூட்டம் இருந்துதானே ஆக வேண்டும்? இக்காரியத்திற்கு பாடுபட, இன்று நம்மில் யார் இருக்கிறார்கள்?” என்ற கேள்வியோடு மாணவர்கள் பொதுப் பணியாற்றத் தயாராக வேண்டுமென்ற சிந்தனையை விதைத்தார்.

மேலும் அன்றைய கல்வி முறையில் அறிவியலைக்காட்டிலும் வேத - புராணங்களை புகுத்துவதே முதன்மையானதாக இருந்தது என்பதையும், அதிலிருந்து விடுபட்டு வாழ்விய லுக்கும், தன்மான உணர்ச்சி பெறத்தக்கதுமான கல்வியை நோக்கித் தமிழ்ச்சமூகம் நகர வேண்டும் என்பதை, வலியுறுத்துவதுமாக பெரியாரின் உரை இருந்தது.

...கூட்டம் திரளும்

## ‘கண்டா வரச் சொல்லுங்க!’

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எந்தத் திட்டத்தையும் உருப்படியாக அறிவிக்காத பிரதமர் மோடி, தேர்தல் நேரத்தில் மட்டும், ‘தமிழ்நாட்டை முன்னேற்றுவோம்’ எனப் பசப்பல் பிரச்சாரத்தைச் செய்து வருகிறார். இதுதொடர்பாக, எழுத்தாளர் சூர்யா சேவியரின் பதிவு.

“கண்டா வரச் சொல்லுங்க மோடி. அதைக் கொண்டு வந்து தரச் சொல்லுங்க மோடி.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஓடும் ரயில்களில், டீ விற்கும் தமிழனைக் கண்டதுண்டா?

கண்டா வரச் சொல்லுங்க.

மத்தியப் பிரதேசத்தில் போக்குவரத்து சிக்னல்களில், கார் ஸ்டிக்கர் விற்கும் தமிழனைக் கண்டதுண்டா?

கண்டா வரச் சொல்லுங்க.

ஜார்க்கண்ட் மாநில ரயில் நிலைய வாசல்களில், கைக்குழந்தைகளுடன் பொம்மை விற்கும் தமிழனைக் கண்டதுண்டா?

கண்டா வரச் சொல்லுங்க.

பீஹார் மாநிலத்தில், அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதில், வேலை செய்யும் தமிழனைக் கண்டதுண்டா?

கண்டா வரச் சொல்லுங்க.

ராஜஸ்தான் செங்கல் சூளைகளில், குடும்பத்துடன் வேலை செய்யும் தமிழனைக் கண்டதுண்டா?

கண்டா வரச் சொல்லுங்க.

வட மாநிலங்களில், ஒன்றிய அரசுப் பணிகளை ஆக்கிரமித்த தமிழனைக் கண்டதுண்டா?

கண்டா வரச் சொல்லுங்க.

குஜராத் கிரானைட் கடைகளில் குடும்பத்துடன் தங்கி, கூலி வேலை செய்யும் தமிழனைக் கண்டதுண்டா?

கண்டா வரச் சொல்லுங்க.

வடமாநில டிராபிக்கில், ஹிந்தி தெரியாமல் பிச்சை எடுக்கும் தமிழனைக் கண்டதுண்டா?

கண்டா வரச் சொல்லுங்க.

‘இந்தி படித்தால், வேலை கிடைக்கும்’ என்று சொல்வோரே, புலம்பெயர் தொழிலாளிகளாய்

வடமாநிலங்களிலிருந்து தமிழகம் நோக்கி, குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு, கூட்டம் கூட்டமாக நடந்து வந்த தமிழனைக் கண்டதுண்டா?

கண்டா வரச் சொல்லுங்க மோடி.

இந்தியாவே தமிழ்நாட்டில் வந்து வாழ்கிறது. தமிழ்நாட்டை இவர்தான் வந்து முன்னேற்றப் போகிறாராம். எங்களிடமிருந்து பறித்துக்கொண்ட வரிகளில், தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய அனைத்து நிதிகளையும் கொடுத்தால் போதும். அதைக் கொண்டாந்து தரச் சொல்லுங்க” என எதார்த்தமாகப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்




### தலைவர் முன் எனது உரை!



அ.விக்னேஷ்வர்

2013-ஆம் ஆண்டு அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் கலந்துகொண்ட இளைஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டம், ஈரோடு மாவட்டம், காஞ்சி கோயிலில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஈரோடு ஒன்றியம், சித்தோடு பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்த நான், கழகத்தின் ‘ஐம்பெரும் முழக்கம்’ குறித்து உரையாற்றினேன். கழகத் தலைவர், அமைச்சர்கள் அண்ணன் முத்துசாமி, அண்ணன் கோவி.செழியன், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், முன்னாள் அமைச்சர்கள் என்.கே.கே.பெரியசாமி, என்.கே.கே.பி.ராஜா, சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோர் முன்பாகப் பேசியது மறக்க முடியாது.

– அ.விக்னேஷ்வர்,
ஒன்றிய இளைஞர் அணி, அமைப்பாளர், ஈரோடு ஒன்றியம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com


## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

99

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# சட்டத்தின் சட்டைக்கு மூளை கொடுத்தவன்!




இந்திய ஒன்றியம், தனது 77-வது குடியரசு தினத்தைக் கொண்டாடி முடித்திருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் குடியரசு தினமாக குறிக்கப்படுகிறது. பல முறை திருத்தப்பட்டிருந்தாலும், இன்னும் பல திருத்தங்களுக்கான தேவை இருந்தாலும் மிகப் பெரிய ஆவணமாகத் திகழ்கிறது, இந்திய அரசியலமைப்புச் சட்டம்.

அப்படிப்பட்ட இந்திய அரசியல் அமைப்புச் சட்ட வரைவின் தலைவராக இருந்தவர், பாபா சாஹேப் அம்பேத்கர், ஆனால், சட்டப் புத்தகத்தின் முகப்புக்கு (PREAMBLE) நேருவின் பங்களிப்பு அதிகம் என ஆதாரமற்ற பொதுக்கருத்து நிலவுகிறது. அதை சில ஆய்வாளர்களும் சொல்வது வேடிக்கை. ஆனால், இந்தக் கருத்தை மறுத்து, அரசியலமைப்புச் சட்ட முகப்பை உருவாக்குவதில், அண்ணல் அம்பேத்கரின் பங்களிப்பை போதிய ஆதாரங்களுடன் விளக்குகிறது ஆகாஷ் சிங் ரத்தோர் எழுதிய ‘அம்பேத்கரின் முகப்புரை. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் இரகசிய வரலாறு’ எனும் நூல். எதிர் பதிப்பகம் இந்நூலை, தமிழில் மொழியாக்கம் செய்து வெளியிட்டுள்ளனர்.

புத்தகம் முழு அரசியல் அமைப்புச் சட்ட முகப்பையும் அலசாமல் 6 சொற்களை மட்டும் எடுத்துக்கொண்டு அதில் அம்பேத்கரின் தாக்கத்தையும், அந்தச் சொற்கள் உருவான வரலாறையும் விளக்குகிறது. JUSTICE, LIBERTY, EQUALITY, FRATERNITY, DIGNITY, NATION இவைதான் அந்த ஆறு சொற்கள், சட்ட முகப்பிலேயே சக்திவாய்ந்த ஆறு சொற்கள் என்று இவற்றைக் கூறலாம்.

இந்த 6 சொற்களுக்குப் பின்னணியில் இருக்கும் நீண்ட நெடிய வரலாற்றையும் அண்ணல் அம்பேத்கரின் வாழ்க்கையில், அவை நேரடியாக ஏற்படுத்திய தாக்கங்களையும் கவனப்படுத்துகிறது இந்நூல். பலர் அரசியலமைப்புச் சட்டத்துக்கு உரிமை கொண்டாடினாலும், அதில் இடம்பெற்றிருக்கும் இந்த ஆறு வார்த்தைகள் அம்பேத்கரின் வாழ்க்கையுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடையவை, காந்தி தன் வாழ்நாள் முழுவதும் பகவத் கீதையைத் தூக்கி சுமந்தார், ஆனால், அண்ணலோ இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை மட்டும் உறுதியாக நம்பினார்.

அரசியலமைப்புச் சட்டத்தில் மதம், கடவுள் சார்ந்த கருத்தோ அல்லது தனிநபர் புகழ்ச்சியோ இடம்பெறாமல், தவிர்த்ததற்கு அம்பேத்கர் முக்கிய காரணம், காந்தியின் பிற்போக்குத்தனங்கள் நிறைந்த கிராமங்கள் இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் மட்டுப்படுத்தப்பட்டன. ‘பார்ப்பனிய மனுநீதியை எதிர்த்து, அண்ணல் எழுதிய மானுடநீதிதான் இந்த அரசியல் அமைப்புச் சட்டம்’ என்கிறார் நூல் ஆசிரியர்.

இருட்டடிப்பு செய்யப்பட்ட அம்பேத்கரின் உழைப்பை, இதுபோன்ற நூல்களே வெளிக்கொண்டு வருகின்றன. கவிஞர் யுகபாரதி அம்பேத்கரைப் பற்றிய பாடலில் “சட்டத்தின் சட்டைக்கு மூளை கொடுத்தவன்” என்று எழுதியிருப்பார். அந்த வரிகள் எவ்வளவு உண்மைத்தன்மை கொண்டவை என்பதை, இந்நூலைப் படிப்பவர்கள் உணர முடியும்.

...வாசிப்போம்.

## திருச்சி போர்க்கோலம்!

கருவூலம்

இந்தி திணிப்பு எதிர்ப்பு அறப்போரின் ஆறாம் களம், திருச்சி மாவட்டத்தில் 18-5-1964-இல் 15 ஊர்களில் நடைபெற்றது. அணி அணியாகக் கழகத் தோழர்கள் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன், மறியல் செய்து கைதாகினர். ஒவ்வொரு ஊரிலும் திட்டமிட்டபடி, 15 பேர் வரை கைதாகி சிறைகளை நிரப்பினர். சட்டமன்ற உறுப்பினர்களான அன்பிலார், எம்.எஸ்.மணி, எஸ்.மணி, திருமதி செகதாம்பாள் வேலாயுதம். அ.தியாகராசன் ஆகியோர் மறியல் செய்து கைதாகினர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131